முருகப்பெருமான் துணை

துறையூர் ஓங்காரக்குடிலாசான் ஆறுமுக அரங்கமகா தேசிக சுவாமிகளுக்கு

**மகான் சுப்ரமணியர் அருளிய ஞான அறிவுரை ஆசி நூல்** பாகம் : 1585

சுவடி வாசித்தளித்தவர் T. ராஜேந்திரன், M.A., B.Ed.,

ஓம் சரவண ஜோதியே நமோ நம

31.01.2024, புதன்கிழமை

1. அறம்போற்றும் ஞான வள்ளலே
அன்னதானத்தின் தத்துவம் உலகோர் அறிய
வரம் தந்து தர்மம் வளர்க்கின்ற
வள்ளலே வாழுகின்ற ஞானியே
2. ஞானியே உந்தனுக்கு சுப்ரமணியர் யானும்
நாட்டிடுவேன் ஞான அறிவுரை ஆசி
(சோபகிருது வருடம் தை மாதம் 17 ம் நாள், 31.01.2024, புதன்கிழமை)
கனிவேலவன் என் தயவோடு அரங்கன் நீ
கலியுகத்தில் அவதார நோக்கத்தை பூர்த்திசெய்து வருகின்றாய்
3. வருகவே அரங்கன் உன் தர்மம்
வளரவளர வையகத்தில் மாற்றம் உண்டுஉண்டு
தருகின்ற அரங்கன் தர்மகுணம்
தரணியில் உலகோர்க்கெல்லாம் சித்தியாகி
4. ஆகியே உலகோர் அனைவருமே
அன்னதானத்தை ஆதரிக்கின்ற வளர்க்கின்ற சக்திகளாக
அகிலமதில் நிரம்பி இனிதே
அரங்கன் நோக்கம் பூர்த்திகொள்ள நேரும்
5. நேர்மைகொண்ட ஞானவான்களாக
நிலவுலகில் அரங்கன் உன் சீடர் பெருமக்கள்
வருங்காலம் மாற்றும் சக்திகளாக
வல்லமை உள்ளவர்களாக வந்து இனிதே
6. இனிதே இந்த உலகத்தில்
இணையில்லாத ஞான ஆட்சி
கனிவேலவன் என் தயவோடும் ஆசியோடும்
கண்டுரைப்பேன் உலகமாற்றமாக இனிதே நடந்தேறும்
ஞான அறிவுரை ஆசி முற்றே

–சுபம்–